அ.வ.எண்: 47/2025 நாள்: 19.08.2026

வா.சா.1 –பாக்கியம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வழக்கு சொத்தில் யார் வீடு கட்டி உள்ளது என்றால், நான் தான் கட்டி உள்ளேன். எத்தனை வீடுகள் கட்டி உள்ளேன் என்றால், 2 வீடுகள் கட்டியுள்ளேன். எனது மகன்களின் பெயர் காளை மற்றும் செல்வபாண்டியன் என்றால் சரிதான். மேற்படி 2 வீடுகளும் எனது மகன்களுடையது என்றால் சரிதான். எனது மருமகளான சத்தியலட்சுமி மற்றும் மலர் ஆகியோருக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து ஆக்கிரமிப்பு செய்ததாக அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அது சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தற்போது வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பு பற்றியோ அல்லது வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் வழக்கு பற்றியோ எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் நான் குறிப்பிடவில்லை என்றால், அதைப் பற்றி

எனக்கு தெரியாது.

2. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண். 706 ஆகும். வழக்கு சொத்திற்கு அருகில் சர்வே எண். 281 உள்ளது என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது மருமகள் காளை மனைவி சத்யலட்சுமி என்பவர் சர்வே எண்.281/1–ல் ஆக்கிரமிப்பு செய்து சமையலறை அமைத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது மற்றொரு மருமகளான செல்வபாண்டியன் மனைவி மலர் என்பவரும் அதே சர்வே எண்ணை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி உள்ளார் என்றால் 18 வருடங்களாக இருந்த சமையலறையை இடித்து விட்டு தற்போது புது கட்டிடம் கட்டி உள்ளார்.

3. புதியதாக சமையல் அறை கட்டும் பொழுது எங்களுடைய இடத்திற்குள் கட்டாமல் சர்வே எண் 281/1–ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டி உள்ளோம் என்றால் சரியல்ல, பழைய காம்பவுண்ட் தற்போது வரை உள்ளது, அதற்குள்ளே தான் கட்டி உள்ளோம். சர்வே எண் 281/1 என்பது சர்க்கார் புறம்போக்கு ஊரணி பாதை என்று உள்ளது என்றால், சரியல்ல பாதை வேறு இடத்தில் வருவதாக கூறினார்கள். எங்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.281/13 மற்றும் 281/14 ஆகியவற்றிற்கு பட்டா வழங்குவதில் இந்த பிரதிவாதிகளுக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். நான் ஆக்கிரமிப்பு

செய்துள்ள சர்வே எண்.281/1–ஐ பொறுத்துதான் வட்டாட்சியர் ஆட்சேபனை தெரிவிக்கிறார் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் சர்வே எண்.281/1–ல் உள்ள ஆக்கிரமிப்பை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நேர்மையான நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2026.08.19 15:14:58 +0530